# கண்ணிவெடிக்கு 7 ராணுவம் பலி

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 3 7 - 1 - 86 செவ்வாய் (மார்கழி 23 ரபியு ஆகிர் 25) முழக்கம் 833

## ஓமந்தையில் நேற்று நடந்தது

(வவுனியா)

வவுனியாவுக்கும் ஓமந்தைக்கும் இடையே நேற்று நடைபெற்ற நிலக் கண்ணிவெடித் தாக்குதலினால் ஆறு இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே பலியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மற்றொருவர் ஆஸ்பத்திரியில் மரணமானார். மேலும் ஒருவர் மோசமான காயத்துக்குள்ளானார், நேற்றுப் பிற்பகல் 3.45 மணியளவில் கவச வண்டியொன்றில் இராணுவத்தினர் ரோந்து சென்ற போதே கண்ணி வெடியில் சிக்க நேர்ந்தது மரணமானவர்களில் ஒருவர் உயர் அதிகாரியெனவும், அறுவர் சிப்பாய்களெனவும் தெரிவிக்கப்பட்டது. இவர்களில் ஒருவரின் சடலம் சின்னபின்னமாகச் சிதறிக் கிடந்தது. இவர்கள் பயணம் செய்த கவச வண்டி சுக்குநூறுகி சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து இருநூறு யார் தூரத்திற்கப்பால் கிடக்கக் காணப்பட்டது. படுகாயத்திற்குள்ளான சிப்பாய் விமான மூலம் கொழும்பு இராணுவ ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். இச்சம்பவத்தையடுத்து மாங்குளம் வவுனியா பாதையின் சகல போக்குவரத்தும் தடைப்பட்டன. எங்கும் பதற்றநிலை காணப்பட்டது,

★ ★ சென்னையில் அமைச்சர் தொண்டமான் பேட்டி

# இனப்பிரச்சினைக்கு பேச்சுமூலம் தீர்வுகாணும் சாத்தியமில்லை!

## வன்முறை தொடரும்போலத் தெரிகிறது; ஜனாதிபதி விரும்பின் தேர்தல் நடைபெறும்

(சென்னை)

இலங்கையின் இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கான சாத்தியக் கூறுகள் மிகவும் குறைந்துள்ளதாகவும், இலங்கை அரசாங்கமும், போராளிகளும் தங்கள் நிலைப்பாட்டில் உறுதியாக இருந்து வருகின்றனர் எனவும் அமைச்சர் எஸ். தொண்டமான் கருத்து வெளியிட்டுள்ளார்.

''விட்டுக் கொடுக்கும் தன்மை இருபகுதியினரிடமும் இல்லாததால், தீர்வு காணும் சாத்தியமும் இல்லை'' என யு. என். ஐ. நிருபருக்களித்த பேட்டியின் போது அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கடந்த இரண்டு வருடங்களாக இலங்கையில் வன்முறைகள் நிகழ்ந்து வருவதாகவும் இது தொடரும் என்றே தோன்றுவதாகவும் அவர் கூறினார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண இந்தியா என்ன செய்ய முடியும் என எண்ணுகிறீர்கள் என்று கேட்டதற்கு இந்தியா என்ன செய்ய முன்வருகிறது என்பதை பொறுத்திருப்பதாகவும் அவர் சொன்னார்.

இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகள் திரும்பிச் செல்லும் வரையும் சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்திய வம்சாவழியினரை இந்தியா ஏற்றுக் கொள்ளாது என பிரதமர் ராஜீவ் காந்தி அண்மையில் விடுத்த அறிக்கையை இந்தப் பிரச்சினையில் இந்தியாவின் நிலை குறித்து கவலை ஏற்படுத்தியுள்ளதாக திரு. தொண்டமான் குறிப்பிட்டார்.

அடுத்த புதன்கிழமை அவர் பிரதமர் ராஜீவ் காந்தியை

—6–ம் பக்கம் பார்க்க

### ஞாயிறு கொலை 7ஆக அதிகரிப்பு

நேற்று முன்தினம் மாலை பண்ணையில் படையினரின் துப்

...6ம் பக்கம் பார்க்க

## பொதுத் தேர்தல் வரை ஸ்ரீமாவோ எம். பி. இல்லை

அத்தனகல தொகுதி எம். பி. யாக 'சிட்' மூலமோ, அல்லது இடைத்தேர்தல் மூலமோ திருமதி ஸ்ரீமாவோ பாராளுமன்றம் செல்லமாட்டார்.

இந்த முடிவு நேற்று நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

பொதுத் தேர்தல் மூலமே திருமதி பண்டாரநாயக்கா பாராளுமன்றம் செல்லவேண்

—6ம் பக்கம் பார்க்க

### நேரடிச் சமர்

(திருமலை)

கட்டைபறிச்சான் பகுதிக்கு நேற்று மாலை சென்ற சீரு

—6ஆம் பக்கம் பார்க்க

## ஆறு பேரின் சடலங்கள் உறவினரிடம் ஒப்படைப்பு

நேற்றுமுன்தினம் மாலை துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்த ஏழுபேரில் ஆறுபேரின் மரணவிசாரணைகள் நேற்று நடைபெற்றபின் அவர்களின் சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

சுங்கத்திணைக்கள உத்தியோகத்தர்களான அரியாலை கனகரட்ணம் வீதியைச் சேர்ந்த தருமலிங்கம் திலகேந்திரன் (34), புங்கங்குளம் புகையிரத நிலையமடியைச் சேர்ந்த கந்தையா சந்திரதாசன் (34), கரப்பன், ஊர்காவற்றுறை திருமதி தருமலிங்கம் அதிருபவதி (42), யாழ் சென்பற்றிக்ஸ் வீதி செபமாலை தேவசாசன்

—6ஆம் பக்கம் பார்க்க

அமைச்சர் லலித் அறிவிப்பு:

## கூட்டணியோ, போராளிகளோ பிரச்சினையை தெளிவாக தெரிவிக்கவில்லை

தமிழர் விடுதலைக் கூட்டணியினரோ, தீவிரவாதிகளோ தமது குறைபாடுகளை எதுவென தெளிவாக தெரிவிக்கவில்லை என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி நேற்று கொழும்பில் வெளிநாட்டு ராஜதந்திரிகள் மத்தியில் பேசுகையில் கூறினார்.

தொடர்ந்து பேசிய அமைச்சர் இவர்கள் பிரச்சினைகளை தெளிவாக அரசாங்கத்துக்கு எடுத்துக் கூறியிருந்தால் ஒவ்வொன்றாக அவற்றுக்கு தீர்வு காண அரசால் முடிந்திருக்கும் என்றார்.

சர்வகட்சி மாநாடு நடைபெற்றபோது குறைபாடுகள் எதுவென கூட்டணியினரிடம் அரசாங்கம் வினவியது. திம்பு பேச்சுவார்த்தையின் போதும் இதேமாதிரி தீவிரவாதிகளிடம் கேட்கப்பட்டது. ஆனால் கூட்டணியோ, தீவிரவாதிகளோ இதற்கு தீர்க்கமான பதிலை தரவில்லை என்று அமைச்சர் சொன்னார்.

தமிழர்களின் பாரம்பரிய தாயகம் பற்றி குறிப்பிட்ட அவர் தென்கிழக்காசியாவில் உள்ள எந்தவொரு நாடும்

—6-ஆம் பக்கம் பார்க்க

ஜனதாக்கட்சி தீர்மானம்:

## அப்பாவித தமிழர்கள்மீது வன்முறை அதிகரிக்கிறது!

(புதுடில்லி)

இலங்கையில தமிழ் மக்களின் நிலைமை மிகவும் மோசமான நிலையில் இருப்பதாக பாரதிய ஜனதா கட்சியின் தேசிய செயற்குழு ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளது.

தீவிரவாதிகளை ஒடுக்குவதாக கூறி அப்பாவி தமிழ் மக்கள் மீது வன்முறைகள் நடப்பதாக இக்கட்சியின் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று சண்டிக்கேட்டில் நடைபெற்ற இக்கட்சியின்

— 6-ஆம் பக்கம் பார்க்க

## கண்காணிப்பு குழு சென்ற ஹெலிகப்டருக்கு சுடப்பட்டதாக அரசாங்கம் அறிவிப்பு

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் விசாரணைகளை தீவிரவாதிகள் இரண்டாவது தடவையும் சீர்குலைத்ததாக அரசாங்கம் அறிவித்தது.

நேற்று முன்தினம் காலை பதினொரு மணியளவில் கோட்டையில் பாதுகாப்புப் படையினரின் முறைப்பாடுகள் பதிவானது. பிற்பகல் மூன்று மணிக்கு கோட்டைக்கு வெளியே குண்டு வெடிப்புகள் தொடர்ச்சியாகக் கேட்டதுடன் துப்பாக்கி வெடிகளும் கேட்டன. ஆயுதப் படையினரும் திருப்பிச் சுட்டனர்.

மாலையில் கண்காணிப்புக்

—6–ஆம் பக்கம் பார்க்க

### கணேஷ் கொழும்பில்

சூட்டுக்காயத்துடன் யாழ். ஆஸ்பத்திரியில் அபாய நிலை

...6ம் பக்கம் பார்க்க

## முல்லைத்தீவில் 2 பெண்கள் இரவுநேரம் சுடப்பட்டனர்

(வண்ணார்பண்ணை)

நேற்றுமுன்தினம் இரவு இரு இளம் பெண்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் முல்லைத்தீவிலிருந்து அம்புலன்ஸ் மூலம் கொண்டுவரப்பட்டு யாழ்.வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ் இருவரும் சர்வோதயம் இயக்கத்தல் கடமையாற்றுபவர்கள் என தெரிவித்துள்ளனர்.

சம்பவதினம் இவ் இருவரும் சுகயீனம் காரணமாக முல்லைத்

...6 ம் பக்கம் பார்க்க

### 30 பேர் சிகிச்சை

(வண்ணார்பண்ணை)

யாழ்நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற துப்பாக்

...6 ம் பக்கம் பார்க்க

தமிழ் மக்கள் விரும்பிப் படிக்கும் பத்திரிகை ஈழமுரசு

## வரி விளம்பரம்

### தேவை

பாவித்த, பாவிக்க முடியாத டெலிவிஷன், வீடியோ டெக் என்பன வாங்கப்படும். விபரங்களுக்கு Jaffna Technical Institute, ஸ்ரான்லி வீதி, (புகையிரதக் கடவையருகாமை) யாழ்ப்பாணம். R 15244

### திட்டப்பரிசு

எவ்வித முதலீடுகளுமின்றி தினமும் வருவாய் தருவதும் / மாதாந்த அதிஷ்டமும் / ருதுவானாலும் / திருமணமானாலும் / பிரசவமானாலும் / விபத்தானாலும் / மரணமானாலும் / ஏராளமான ரொக்க நன்கொடைகளும் / கடன் வசதிகளும் ஒருங்கேயமைந்த திட்டமிது. கிளை ஸ்தாபன மனேஜர் / சாளர் தொகுதி தோறும் தேவை. விபரங்களுக்கு நேரில் வரவும் அல்லது முத்திரைக் கவருடன் விண்ணப்பிக்கவும். லக்கி பெனிபிட் கோ. லிமிட்டட், பொதுச் சந்தை, கோப்பாய். R15266

### காணவில்லை

பருத்தித்துறைக்கும் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்துக்கு மிடையில் (764 வழி) காரிலிருந்த சூட்கேஸ் ஒன்று தவறிவிட்டது. இதில் T. Kumaraswamy, 275 R. de Silva Mawatta, Colpetty, Colombo-3 என்ற விலாசம உள்ளது. கண்டெடுத்தோர் தயவுசெய்து கீழ்வரும் விலாசத்தில் ஒப்படைக்கவும் அல்லது அறியத் தரவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். T. குமாரசாமி, தம்பசிட்டி, பருத்தித்துறை. R/15282

**வியாபாரம்பெருக விளம்பரம் செய்க**


தமிழ்ப் பகுதி அரசு உத்தியோகத்தர்

# கடமையில் அசிரத்தையாக இருத்தல் இனத்துரோகமே

(யாழ்ப்பாணம்)

"அரசாங்க உத்தியோகத்தர்களில் பலர் தம் கடமையைச் செவ்வனேசெய்யாது அசமந்தப் போக்கில் நேரத்தைப் போக்கடிக்கும் இழிநிலையை இன்று காண்கிறோம். இவ்வாறான செயல் எமது இனத்திற்கு இன்றைய காலகட்டத்தில் செய்யும் துரோகம் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணர வேண்டும்,"

இவ்வாறு வயாவிளான் தபாலதிபராகக் கடமையாற்றி செங்கலடிக்குப் பதவியுயர்வுடன் இடமாற்றலாகிச் செல்லும் திரு. சி. தர்மராஜனுக்கு ஊழியர்கள், உத்தியோகத்தர்களால் அளிக்கப்பட்ட பிரிவுபசார விழாவில் பலாலி உப-தபால் நிலைய அதிபர் திரு. சி. சுப்பிரமணியம் பேசுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "திரு. தர்மராஜன் போன்றோரின் அளப்பரிய தியாக உணர்விலான சேவை எளிதில் மறக்கக் கூடியதல்ல. கடமையில் கவனமின்றி சம்பள நாளை எதிர்பார்த்து நிற்கும் சுயநலமிக்க பல அரசு உத்தியோகத்தர்கள்மத்தியில்இவர்கள் தனித்துவத்துடன் முன்னுதாரணமாகத் திகழ்கின்றனர்." என்றார்.

திரு. தர்மராஜன், தனது நன்றியுரையில், தனதுசேவைக் காலத்தில் மக்களும், ஊழியர், உத்தியோகத்தர் அளித்த ஒத்துழைப்புக்குத் தான் பெரிதும் கடமைப்பட்டுள்ளதாகத் சொன்னர்.

திரு. எட்வேட் உட்பட மற்றும் பலரும் பேசினர்.

## சுதுமலை அம்பாள் ஹோமம்

சுதுமலை அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானத்தில் உத்தம மகா மிருத்தியஞ்ஜய ஹோமம் இன்று நடைபெறவுள்ளது. தமிழ் மக்கள் இன்று எதிர்நோக்கும் துன்பங்களும், பேராபத்துக்களும், இடையூறுகளும், வறுமைகளையும் தவிர்க்கும் பொருட்டே இது நடத்தப்படுகிறது.

இன்று காலை ஆறு மணிக்கு மகாமிருத்தியஞ்ஜய யாகம் ஆரம்பமாகி ஆச்சார்ய தல அனுட்டானமும், மகாமிருத்தியஞ்ஜய ஹோமமும் நடைபெறும். இதனைத் தொடர்ந்து வேதபாராயணம், திருமுறை புராணம், மங்கள இசை முதலியன நடைபெறும்.

## அதிகாரிகள் கவனத்திற்கு

சுன்னுகம் - சங்கானை வீதி, பாவிக்க முடியாத நிலையில் சேதமுற்றுள்ளது. குன்றும் குழியுமாகக் காணப்படும் இவ்வீதியில் மழை காலங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதினுல் இப்பாதையைப் பாவிக்கும் பாதசாரிகளும், வாகன சாரதிகளும் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டி ஏற்படுகின்றது. இவ்வீதியை திருத்தியமைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## இந்துமன்ற நிர்வாகிகள்

நாவற்குழி இந்து இளைஞர் முன்னேற்ற மன்ற அங்குரார்ப்பணமும் புதிய அங்கத்தவர் தெரிவும் அண்மையில் ஆசிரியர் என். நாகரத்தினம் தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவாகினர். மன்ற போஷகர்: பிரம்ம ஸ்ரீ செ. கந்தசாமி குருக்கள், தலைவர்: சி. செல்வரத்தினம், உப-தலைவர்: சு. தவகுமார், செயலாளர்: ச. விக்னேஸ்வரன், உப-செயலாளர்: செல்வி ப. கிரிசா, பொருளாளர்: பொ. ஈஸ்வரன் அறுவர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

## பேசாலையில் ஒளிவிழா

பேசாலை அகதிமுகாமில் அண்மையில் ஒளிவிழா கொண்டாடப்பட்டது. மன்னர் மறை மாவட்ட ஆயர் அதி வணக்கத்துக்குரிய கலாநிதி. தோமஸ் சவுந்தரநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இவ்விழாவை பேசாலை பங்குக்குரு அருள்திரு. அல்பன், கிராம சேவை அலுவலர் இ. மிராண்டா ஆகியோர் குத்து விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர். கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## பிறந்தநாள் வாழ்த்து

❀ குருநகர், ஜெயக்குமார் பேரின்பநாயகி தம்பதியின் மகள் செல்வறஞ்சினி இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

❀ கொழும்புத்துறை கிழக்கு, கமலநாதன் தனேஸ்வரி தம்பதியின் மகன் கஜேந்திரன் இன்று தனது பத்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

❀ பாஷையூர், தேவதாசன் தவபுஷ்பம் தம்பதியின் மகன் ரூபேந்திரா இன்று தனது பதினேராவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

## நிர்வாகிகள்

(பூநகரி)

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கான பாவனையாளர் பாதுகாப்புச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் பூநகரி உதவி அரசாங்க அதிபர் திரு. நே. சபாபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

உள்நாட்டு விலைக்கட்டுப்பாட்டதிகாரி எம். கே நவரத்தினமும் சமுகமளித்திருந்த இக்கூட்டத்தில் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்- உதவி அரசாங்க அதிபர் திரு. நே. சபாபதிப்பிள்ளை, செயலாளர் திரு செ. சண்முகதாசன், உபசெயலாளர் திரு. இரா. செல்வராசா, பொருளாளர் திரு அ. சிவகராசா நால்வர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.


யாழ். நகர் அருணுவின் இசையமைப்பில்

**K. S. ராஜா வழங்கும்**

**நட்சத்திர இரவுகள்**

இடம்: கச்சாய் அம்மன் கோயிலடி (கொடிகாமம்).
காலம்: 12-01-1986 ஞாயிறு மாலை 7 மணி
நிகழ்ச்சிகள்; 1. தேனிசை மழை
2. பாட்டுக்குப் பாட்டு
3. K S. ராஜாவுடன் இரண்டு நிமிடங்கள்
பங்கு கொள்வோர் 5/- செலுத்தி கலந்து கொள்ளலாம்.

R15274 P. மனோகரன்



க. பொ. த. உயர்தர வகுப்பு

**மாணவர்களுக்கோர் நற்செய்தி!**

அநேக பெற்றோர்களின் வேண்டுகோளிற் கிணங்க யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள பட்டப்படிப்புகள் கல்லூரியின் கிளைநிறுவனமான OXFORD 16-1-1986ல் தனது சேவையை ஆரம்பிக்கின்றது.

**G.C.E. A/L 1986/87 AUG.**

**கலை, விஞ்ஞானம், வர்த்தகம்**

யாழ். நகரின் முன்னணி ஆசிரியர்கள் இணைந்து வழங்கும் சேவை

**கட்டணம்: ரூபா 60/- மட்டுமே**

மாணவர்கள் தங்களது அனுமதியை 15-1-1986க்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

விபரங்களுக்கு:
பட்டப்படிப்புகள் கல்லூரி,
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

R15279



**A/L 87**

தூயபிரயோககணிதம்
சனி, ஞாயிறு வகுப்பு

7-15: தொடர்பு வேகம்
8-30: நுண்கணிதம்

**ஆரம்பம்: 11.1.86**

ஆசிரியர்: ரவிமோகன்
யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்) R/15277


## ஓராண்டு நினைவஞ்சலி

**செல்வன் தம்பித்துரை தயாளன்**

மலர்வு: 16-4-1963 உதிர்வு: 20-12-1984

காலன் எங்களிடமிருந்து இவ்வளவு சீக்கிரமாக உம்மை பிரித்துக்கொண்டான். மறைந்து ஓராண்டு ஆகியும் உன் நினைவு பசுமையே. உனது பிரிவால் வாடி, அன்பு முகத்தை காணுமல் வேதனையுடன் நினைவு கூர்ந்து உனது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.


"இலட்மி வாசா"
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

பெற்றோர், சகோதரர்கள்,
மருமகன், மைத்துனன்.
R/15271

## முப்பத்தோராம் நாள் நினைவஞ்சலி

**திரு. குமாரசாமி சங்கரப்பிள்ளை**

**(வைத்திலிங்கம்) அவர்கள்**



(சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் முன்னுள் கனிஷ்ட அதிபர்)

பிறப்பு; 18 12.1924 மறைவு: 8.2.1985

உற்ற பெருந்துணையாயிருந்து எம்மை எல்லாம் வழிநடத்திச் சற்றும் எதிர்பாராதவகையில் இறைவனடி சேர்ந்தீர்களே! தங்கள் இனிய ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

இன்று அவரது இல்லத்தில் நடைபெறவுள்ள சபிண்டீகரண கிரியைகளில் பங்கு கொண்டு அவர் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்க வருமாறு உற்றார், உறவினர், நண்பர், மாணவர் அனைவரையும் அன்புடன் வேண்டுகிறோம்.

பெரிய அரசடி,
சாவகச்சேரி.

மனைவி, மக்கள்,
மருமக்கள், முதலானோர்.

B/991

# கர்ப்பிணித் தாய்மாருக்கு இலை உணவு அவசியமாகும்

(வேலணை)

கர்ப்பிணித் தாய்மாருக்கும், பாலூட்டும் தாய்மாருக்கும் இலைகள், குழை வகைகளிலிருந்து போஷாக்கான கறிவகைகளை எப்படித் தயாரிப்பதென்பதைப் பற்றிய செய்முறைப் பயிற்சிகள், வேலணை அரசினர் ஆஸ்பத்திரியில் வைத்து நடாத்திக் காண்பிக்கப்பட்டது.

இப்பில் இலை, மொசு மொசுக்கை இலை, தூதுவளை இலை, முசுட்டை இலை, கோவ்வை இலை, கறி முருக்கிலை ஆகிய இலை, குழை வகைகளை ஒன்று சேர்த்து குழைவல் செய்து காண்பிக்கப்பட்டது. இவற்றை சாப்பிட்ட தாய்மார்கள் மிகவும் நன்று இருப்பதாக தெரிவித்தனர்.

வேலணை மேற்கு குடும்பநல சேவையாளர் செல்வி. பாலாம்பிகை விநாயகமூர்த்தி, வேலணை கிழக்கு குடும்பநல சேவையாளர் விமலா சிவசுப்பிரமணியம் ஆகியோர் கூட்டாக இச் செய்முறைப் பயிற்சிகளை நடாத்திக் காண்பித்தனர்.

இதுபற்றி வேலணை மேற்கு குடும்பநல உத்தியோகஸ்தர் செல்வி பாலாம்பிகை கருத்து தெரிவிக்கையில் இலை, குழை வகைகளில் எவ்வளவோ உயிர் சத்துக்கள் உண்டென்பதை நம்மில் எத்தனைபேர் அறிவதில்லை. மேற்கூறிய இலைவகைகளில் இரும்புச்சத்துக்களும், புரதமும் ஏனைய உயிர்ச்சத்துக்களும் உண்டு. இவற்றை ஒவ்வொரு தாய்மாரும் தயாரித்து உண்ணவேண்டும். மேலும் இப்படியான இலைவகைகளை யாவரும் உட்கொண்டால் திடகாத்திரமாகவும் வாழ முடியும் என்றும் குறிப்பிட்டார்.

# ரயில் சேவையை நீடிக்க கோரி மகஜர்

யாழ்ப்பாணத்திலிருந்து மருதானை வரை சேவையிலீடுபடும் யாழ்தேவி ரயிலை கொழும்புக் கோட்டை வரை நடாத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரி போக்குவரத்து அமைச்சருக்கு மகஜர் அனுப்பப்பட்டுள்ளது. இப் புகையிரதம் தற்பொழுது மருதானையுடன் நிறுத்தப்படுவதினால் பிரயாணிகள், பெரும் சிரமங்களை எதிர் நோக்க வேண்டி ஏற்படுவதாகவும், 'பிற்பொக்கட்டிற்கு' பெயர் போன அப் பகுதியில் யாழ்தேவியால் வந்திறங்கும் பயணிகளிடமிருந்து பொருட்கள் கொள்ளையடிக்கப்படுவதாகவும் அம் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

# ஊரைதீவு மாதர்கழக பேச்சுப்போட்டி முடிவுகள்

(ஊரைதீவு)

ஊரைதீவு தமிழ் மாதர் கழகத்தினர் ஊரைதீவு திருநாவுக்கரசு மகாவித்தியாசாலை மண்டபத்தில் நடத்திய ஆயத்தமின்றிப் பேசும் போட்டியில் முதலாமிடத்தினை தி. ஸ்ரீதரனும் இரண்டாமிடத்தை செ. நித்தியானந்தனும் மூன்றாமிடத்தை த. பிரேமானந்தனும் பெற்றனர்.

மாணவர்களுக்கிடையேயான போட்டிகளின்போது மேற்பிரிவில் மு. நந்தகுலசிங்கம், ந. உஷாதேவி, ந. விக்கினேஸ்வரி ஆகியோர் முறையே முதலாம் இரண்டாம் மூன்றும் இடங்களைப்பெற்றனர்.

மத்திய பிரிவில் ம. கலாரஞ்சினி முதலாவது இடத்தையும் ப. குகனேந்திரன் இரண்டாவதிடத்தையும் சோ. உதயணன் மூன்றாவதிடத்தையும் பெற்றனர்.

மிகவும் தரமானதாகவும் கவர்ச்சிகரமாகவும் அமைந்திருந்த கீழ்ப்பிரிவுக்கான போட்டியில் ப. குணேந்திரன் முதலாவதிடத்தைச் சுவீகரித்துக் கொண்டார். ந. கலையரசி இரண்டாமிடத்தையும் த. ஸ்ரீ குமானந்தன் மூன்றுமிடத்தையும் பெற்றனர்.

சட்டத்தரணி திரு. எஸ். கே. மகேந்திரனை பிரதம நடுவராகக் கொண்ட, கே. ஜி. ராஜா, செ. ருபகாந்தன், திருமதி சந்திராகோபால், செ நித்தியானந்தன், தி. ஸ்ரீதரன், ந. தனபாலசிங்கம், திருமதி புற்கலை பாஸ்கரன், ஆசிரியை த. பிரேமானந்தன், செல்வி சு. மோகனராணி ஆசிரியை ஆகியோரை உள்ளடக்கிய நடுவர் குழு ஒவ்வொரு பிரிவுக்கும் மூவர்வீதம்தெரிவுசெய்தபட்டு தீர்ப்புகளை வழங்கியது.

# ஓய்வூதியகாரர் வாரண்ட் பெறுவதில் பெரும் சிரமம்

யாழ். கச்சேரி பென்ஷன் பகுதியில் ஓய்வூதியம் பெறுவோர் தமக்குரிய ரயில்வே வாரண்டை பலத்த சிரமத்தின் மத்தியில் பெற்றுக் கொள்ளுகின்றனர். போதிய ஊழியர்கள் இல்லாததனால் ஓய்வூதியம் பெறுவோர் இதற்காக சமர்ப்பித்த விண்ணப்பங்கள் தேங்கியிருக்கின்றன.

கடந்த வருடம் சமர்ப்பித்த விண்ணப்பங்களுக்கு மேலதிகாரியினால் வாரண்ட் கொடுக்கும்படி உத்தரவு பிறப்பிக்கப் பட்டும் இன்னும் வாரண்ட் வழங்கப்படவில்லை. இதற்காக வயோதிபர்கள் தினமும் அலைகிறார்கள்.

இதே வேளை ஓய்வூதியம் பெறுவோர்கள் தமது பெண் பிள்ளைகளுக்கு ரயில்வே வாரண்டுக்கு விண்ணப்பித்தால் அந்தப் பிள்ளை திருமணம் செய்யவில்லை என்று அத்தாட்சிப்படுத்துமாறு அங்குள்ளவர்களால் கேட்கப்படுகின்றனர். இதனால் இந்த ஓய்வூதியம் பெறுவோர் செய்வதறியாது திகைக்கின்றனர்.

## இன்று 31வது நினைவு நாள்

# ஆசிரிய உலகில் சுடர்விட்டு பிரகாசித்தவர் குமாரசாமி

ஆசிரிய உலகிலே சுடர்விட்டுப் பிரகாசித்த அமரர் குமாரசாமி அவர்கள் மறைந்துஇன்று முப்பத்தோராவது நாள். திருநெல்வேலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையால் வெளியேறி நாட்டின் பல பாகங்களிலும் தமது பணியைத் தொடர்ந்து இறுதியாக 1973ல் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் கனிஷ்ட அதிபராகப் பதவியேற்று ஏழை மக்களின் கல்வி வளர்ச்சியிற் பெரிதும்அக்கறை கொண்டு உழைத்த உத்தமர்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் வரலாற்றில் அதிபர் திரு. பூ. வெற்றிவேலு அவர்களோடு இணைந்து அரும்பாடுபட்டுழைத்து தனக்கென ஓர் தனியிடத்தை இவர் பிடித்துக் கொண்டார்.

பாடசாலையில் நடக்கும் விவகாரங்களுக்கு இவரே முன்நின்று சகல விடயங்களையும் செய்து முடிப்பார். கல்லூரியிலுள்ள சகல அமைப்புக்களிலும் இவர் அங்கம் வகித்து அரும்பணியாற்றினர்.

பலர் கூடிய இடத்திலே இவர் அன்பாக அளவளாவி புன்சிரிப்போடு அவர்களை வரவேற்று புதியவர்களின்அன்பை ஒரு நொடிப் பொழுதில் பெற்றுவிடுவார்.

தென்மராட்சித் தமிழர் ஆசிரியர் சங்கச்செயலாளராக பலகாலம் செயலாற்றி ஆசிரியர்களின் தேவையறிந்து அவர்களுக்கு உடனுக்குடன் உதவி செய்து அவர்களின் உள்ளத்தில் நீங்கா இடம் பெற்றார்.

எதிரும் புதிருமாக விருந்த அரசினர் ஆசிரிய சங்கத்தையும் தமிழர் ஆசிரியர் சங்கத்தையும் இணைப்பதற்கு முன்னேடியாக வெற்றிகண்டு, இணைக்கப்பட்ட பின்பும்போட்டியின்றிச் செயல ளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இவர் ஓர் அற்புதமான கலைஞர், சிறந்த விமர்சகர். சாவகச்சேரித் தொகுதியில் பல்வேறு நிறுவனங்களிலும் தலைவர், செயலாளர், பொருளாளர் முதலிய முக்கிய பதவிகளை ஏற்று அவ்விஸ்தாபன வளர்ச்சிக்காகப் பெரிதும் உதவினார்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்களின் கல்வி வளர்ச்சியை உற்சாகப்படுத்தும் நோக்கமாக மூன்று வகுப்புகளுக்குப் புலமைப் பரிசில்கள் வழங்க முன்நின்று பாடுபட்டவர் இவரே. வகுப்பு 6, வகுப்பு 8, வகுப்பு 12 ஆகிய வகுப்புகளுக்கு இப்புத்தாண்டு முதல் புலமைப்பரிசில் வழங்க நடவடிக்கை எடுப்பதிலே கண்ணும் கருத்துமாக இருந்தார்.

இணக்க சபைத் தலைவராக விருந்து ஏழை பணக்காரர், தாழ்ந்தவர் உயர்ந்தோர் என்ற பாகுபாடின்றி நூற்றுக் கணக்கான வழக்குகளைச் சமரசஞ் செய்து வைத்த உத்தமரின் மறைவு நிரப்ப முடியாது. அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

அ. ஆறுமுகம்

# அரியாலை பகுதிக்கான குடிநீர்விநியோக வேலைகள் முடிவுறஒத்துழைப்புதேவை

(நல்லூர்)

"யாழ் மாநகராட்சி மன்ற ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் அவர்களின் சிபார்சுக்கமைய எமது பகுதி மக்களின் குடி தண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வுகாண யூனிசெப் நிறுவனத்தால் குழாய் கிணறும், தண்ணீர் தாங்கியும் அமைக்கும் வேலைகள் முடிவடைந்து விட்டன. தண்ணீர்க் குழாய்களைத் ஈட்டு பைப் மூலம் தண்ணீர் வழங்கும் பொறுப்பு எங்களுடையதாகும். இதனை எமது இந்தப் பதவிக் காலத்திலே நாம் செய்து முடிக்க எல்லோரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்."

இவ்வாறு காந்தி சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் புதிய ஆண்டின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட திரு. எஸ். பி. ஜீவானந்தம் தலைமைப் பதவியை ஏற்றுக் கொண்ட பின்னர் நன்றி தெரிவித்துப் பேசினார்,

அவர் தொடர்ந்து பேசுகையில் காந்தி சனசமூக நிலையத்தினால் நடாத்தப்படும் கல்விச் சகாய நிதிக்கு நிலையான வைப்புப் பணமாக ஒரு தொகைப் பணத்தைச் சேகரித்து அதனை வங்கியில் வைப்புச் செய்து அதன் மூலம் கிடைக்கும் வட்டியைக் கொண்டே கல்விச் சகாய உதவியை வழங்கும் திட்டமொன்றை மேற்கொள்ள நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எமது பகுதியில்மழைக்காலத்தில் ஏற்படும் வெள்ளத்தைக் கட்டுப்படுத்த மாநகராட்சி மன்றம் மூலம் நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். எமது பாலர் பாடசாலையைப் பொறுப்பேற்று நடாத்தி வரும் யாழ். வை. எம் சி.ஏ ஸ்தாபனம் முடிந்த வருடத்தில் பிள்ளைகளுக்கென வழங்கிய தளபாடங்களின் மூலம் ஓரளவு தளபாடக் குறைபாடு நீங்கியுள்ளது. அத்துடன் பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியை ஒருவருக்கு தமது செலவில் சம்பளத்துடன் கூடிய பாலர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நெறியை வழங்கவும் முன்வந்திருப்பதற்கு யாழ். வை. எம். சி. ஏ. ஸ்தாபன தலைவருக்கும், அதன்செயலாளர் பரிபாலன சபைக் குழுவுக்கும் எமது நன்றிகள் என்று குறிப்பிட்டார்.

திய செயலாளர் ஆசிரியர் செ. சிங்கராசா நன்றி கூறினார்.

# 5 மாணவருக்கு புலமைப் பரிசில்

(யாழ்ப்பாணம்)

வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெற்ற பிரவேசப் பரீட்சையின் பெறுபேற்றின்படி கீழ்க் காணும் மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்குவதற்கு மேற்படி வித்தியாலய பழைய மாணவர்கள் முன் வந்துள்ளனர்.

வருடந்தோறும் இம் மாணவர்களுக்கு ஐநூறு ரூபா வீதம் வழங்கப்படும். பரிசு பெறும் மாணவர் விபரம் வருமாறு; சி. கஜன், அ, ஜெகதீசன், சி. சண்முகதாஸ், க. பிரதிபா, கிஷோர்ஜகான்.

# பத்துப் பேருக்கு பரிசு

மண்டைதீவு ஐக்கிய நாணயசங்கத்தின் விருத்திக்காக, சங்கத்தினரால் விற்பனவு செய்யப்பட்ட திருவுளச் சீட்டுகளில் பரிசுக்குரிய பத்துச் சீட்டுக்களையும் கிராமத்துப் பிரமுகர்கள் பத்துபேர் தெரிந்தெடுத்தனர். இவ் வைபவம் கடந்த புதுவருட தினத்தன்று சங்கத்தலைவி செல்வி ஞா. நடராசா ஆசிரியை தலைமையில் நடைபெற்றது. ஈற்றில், எம்மிடம் திருவுளச் சீட்டுக்களைப் பெற்று உதவி நல்கிய அனைவருக்கும் தலைவர். நன்றியைத் தெரிவித்தார்.

# கல்வி அமைச்சு அனுமதி

(ஆழியவளை)

பருத்தித்துறை கல்வி வட்டாரத்தில் இவ்வாண்டு ஜனவரி முதல் சில பாடசாலைகளில் ஏழாம் ஆண்டுவரை வகுப்புகளை நடாத்த கல்வி அமைச்சு அனுமதியளித்துள்ளது.

# நல்லூர் சிவன் கோவிலில் மகாயாகம்

நாட்டில், அமைதி, சமாதானம் வேண்டி நல்லூர் ஸ்ரீகமலாம்பிகாதேவி சமேத ஸ்ரீகைலாசநாத சுவாமி (நல்லூர் சிவன்கோவில்) தேவஸ்தானத்தில் விசேட ஆராதனைகள் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 23-ம், 24-ம், 25-ம் திகதிகளில் நடைபெற உள்ள இவ் யாக வழிபாட்டுக்கு தேங்காய், கரும்பு, வில்வம், பழம், தானியவகை, பழவகை மற்றும் அபிஷேகப்பொருட்களைத் தந்துதவ விரும்புவோர் அவற்றை நல்லூர் சிவன்கோவிலிலும், நல்லூர் நல்ல லக்சுமி அவெனியூவில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ சத்தியசாயி இல்லத்திலும் ஒப்படைக்கலாமென இவ் யாக வழிபாட்டை ஒழுங்கு செய்த நல்லூர் பகவான் ஸ்ரீ சத்தியசாயி இல்லத்தினர் அறிவித்துள்ளனர்.


## பேராதனைப் பல்கலைக் கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

இப் பல்கலைக் கழகத்தில் வெளிவாரி மாணவர்களாக பட்டப் படிப்பினை கற்கவிரும்பும் பின்வரும் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து எமது கல்வி நிறுவனத்தின் ஊடாக வெளிவாரி மாணவராக பதிவுசெய்வதற்கு தேவையான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

கல்வித் தகைமை: A/L பரீட்சையில் ஒரே தடவையில் ஆகக் குறைந்தது மூன்று பாடங்களில் சித்தி.

சுயவிலாசமிடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட நீண்ட கடித உறையினை அனுப்புவதன் மூலமும், நேரிலும் விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப் பத்திரங்களைப் பெறுவதற்கு எவ்வித கட்டணமும் செலுத்தத் தேவையில்லை.

விண்ணப்ப முடிவுத் திகதி: 31-1-1986

G. A. Q. 1986 மீட்டல், வினு விடை வகுப்பு

B. A. 1986 புதிய பிரிவு

பொருளியல் — S. வரதராஜன்

ஆரம்பம்: 11-1-86 2-30 P. M.

குறிப்பு: 1985ம் ஆண்டு வடமகாணத்திலேயே எமது நிறுவனத்தின் ஊடாகவே ஆகக் கூடுதலான மாணவர்கள் பேராதனைப் பல்கலைக் கழகத்தினால் நடாத்தப்பட்ட B. A. பரீட்சைக்குத் தோற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது.

விபரங்கட்கு;

Economics Studies Centre

200, Main Road, Chundikuli, Jaffna.

T. Phone: 23174 (சென். ஜோன்ஸ் கல்லூரி முன்பாக)

R15269

உதய சிந்தனை

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும். —திருக்குறள்.

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 23336

இதய ஒலி

7-1-86 செவ்வாய்க்கிழமை ( குரோதன ) மார்கழி-23

# கலைக்க வேண்டும்; அல்லது விலக வேண்டும்

கடந்த சனிக்கிழமை வானத்திலிருந்து நடைபெற்ற தாக்குதல்களால் ஐவர் மரணமானதாக எழுதிய செய்தியின் மை காய்வதற்கு முன்னரேயே இரண்டாம் நாள் சம்பவம் நடைபெற்றுள்ளது.

சனிக்கிழமை நடைபெற்ற அரச பயங்கரவாதச் செய்திகளைப் பத்திரிகையில் படித்து முடிப்பதற்கு முன்னரேயே, இரண்டாம் நாள் கொலைச் செய்திகளைக் கேட்கவேண்டிய நிலை எமது வாசகர்களுக்கு ஏற்பட்டு விட்டது.

யுத்த நிறுத்தத்தைக் கண்காணிப்பதற்கு நியமிக்கப்பட்ட குழுவினர் யாழ்ப்பாணம் கோட்டைக்குள் நிற்கும்போதே, கோட்டைக்குள்ளிருந்தும், ஹெலிகப்டரிலிருந்தும் சரமாரியாகத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இச்சம்பவம் நடைபெற்றபோது யாழ்ப்பாணத்தின் சிவில் நிர்வாகத்துக்குப் பொறுப்பான இரு அதிகாரிகளும் கோட்டைக்குள்ளிருக்க நேர்ந்ததாகக் கூறப்படுகின்றது.

சனிக்கிழமை நடைபெற்ற தாக்குதலுக்கு, அசோக் ஹோட்டலைச் சுற்றிக் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருந்ததாகக் காரணம் கூறப்படுகின்றது.

இதன் உண்மை, பொய் நிலைமை பற்றி எந்தக் கருத்தையும் எவரும் கூறமுடியாது.

ராணுவத்தை மேற்கோள்காட்டி, கண்காணிப்புக் குழுவின் செயலாளர் நாயகம் பீலிக்ஸ் டயஸ் அபேசிங்கா விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

உண்மையாக என்ன நடைபெற்றதென்பது பரமரகஸியம்.

பேராசிரியர் சிவத்தம்பி இது தொடர்பாக விடுத்த அறிக்கை, குழுவின் மற்றைய உறுப்பினர்களுக்கும் உண்மையைப் புரிய வைத்திருக்கும்

குழுவிலுள்ளவர்களில் நால்வர் உயர் நீதிமன்ற நீதியரசர்களாகக் கடமையாற்றிப் போதிய அனுபவம் பெற்றவர்களாதலால், வெளியே கூறமுடியாவிடினும், அவர்களால் ''மெய்ம்மையை'' அறிந்திருக்க முடியாதென நினைக்க முடியாது.

சனிக்கிழமைச் சம்பவத்தை ஒரு புறத்தே விடுவோம்.

நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற திடீர்தாக்குதலுக்குக் காரணம் என்ன?

ஹெலிகப்டரிலிருந்து மணித்தியாலக் கணக்காக நடைபெற்ற துப்பாக்கி வேட்டையை பல்லாயிரக் கணக்கான மக்கள் நேரில் காணநேர்ந்தது.

கோட்டைக்குள்ளிருந்து நடத்தப்பட்ட தாக்குதல் மிருகவெறி கொண்டதாக அமைந்திருந்தது.

இதனை எழுதும் போது இரண்டு பெண்கள் உட்பட ஏழு பேர் பலியாகியுள்ளனர். சுமார் எழுபத்தைந்துக்கும் அதிகமானவர்கள் சூட்டுக் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தீவுப்பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வாகனங்களில் வந்தவர்களே மரணமாக நேர்ந்தது. இவர்களில் நால்வர் யாழ்ப்பாணம் சுங்கப்பகுதியின் ஊழியர்கள் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது

நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலுக்கு, பாதுகாப்புக்குப் பொறுப்பானவர்கள் ஏதாவது காரணம் சொல்வார்கள் என்பது நிச்சயம்.

ஆனால் அந்தக் காரணத்தை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் ஏற்றுக் கொள்வார்களா என்பது தான் இப்போது பொதுமக்கள் முன்னுள்ள கேள்வியாகும்.

யுத்த நிறுத்தத்தை அமுல் செய்வதைக் கண்காணிக்க நியமிக்கப்பட்ட குழுவே, யுத்தக் காட்சியைக் காணநேர்ந்துள்ளது என்பதே பொதுவான அபிப்பிராயம்.

இதனையிட்டு குழு சரியாக நடக்க முடியவில்லையானால் அது இயங்குவதில் எந்தப் பிரயோசனமுமில்லை என்று நாம் நேற்றே குறிப்பிட்டிருந்தோம்.

இவ்வாறான ஒரு நிலை ஏற்படுமானல் கண்காணிப்புக் குழுவைக் கலைத்துவிட வேண்டும்;

அல்லது 'மனச்சாட்சி'யுள்ளவர்கள் தாமதமின்றி அதிலிருந்து விலகிவிட வேண்டும்.

தமிழ் தேசியவாதமும் சமுதாயக் கொந்தளிப்பும் 5

# புதிய அரசியல் ஆட்சி நிர்ணயமான பின்னர் மீண்டும் அவர்கள் மீள்வர்!

பேராசிரியர் கா. சிவத்தம்பி

(நேற்றைய தொடர்ச்சி)

இவை எப்படித்தான் இருப்பினும், ஆறுமுகநாவலரின் எழுத்துப் படைப்புகளும் பணியும் ஓர் இந்தியத் தமிழர் உணர்வினின்றும் குறிப்பாக வேறுபட்டவருக, ஓர் இலங்கைத் தமிழர் உணர்வு உண்டாகும் நிலைக்கு இட்டுச் சென்றன. சற்சூத்திரங்கள், பிராமணரைக்கூட விஞ்சிய வேளாளரின் உன்னத மேம்பாடு, சைவ சித்தாந்தத்தின் உன்னத மேம்பாடு, ஆகியவை பற்றிய அவருடைய கருத்தேற்பு ஒன்று இருந்தது. அது யாழ்ப்பாணத்துச் சைவத் தமிழர் வாழ்வின் கலாச்சார எல்லைகளை, மனச் சந்துஷ்டியிற் சலனம் ஏற்படுத்தும் வகையில், நிர்ணயித்து அளித்தது

எனவே, ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பதுகளின் பிற்பகுதியில் இலங்கைத் தமிழர் உணர்வொன்றுக்கு உருக்கொடுக்கும் ஒரு பிரயத்தனம் மேற்கொள்ளப்பட்ட போது, கண்டன எழுத்துக்களில் நாவலர் பெருமான் அப்பட்டமாக இடம்பெற்று இருந்தமை வியப்பல்ல.

அடுத்து, தமிழ்த் தேசியம் எழுந்த விடயத்திற்கு வருவோம். அரசியல் உன்னத குறிக்கோள் தத்துவமாக, தேசியமானது 1956 க்கு முன்னர் எழுவது துர்லபமாக இருந்தது. அதேபோல, 1978, 1983, ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் தேசியம் உக்கிரப்படுத்தப் படுவதும் சாத்தியமில்லாதிருந்தது. தமிழரின் பொருளாதார வரலாற்றிலிருந்து இவற்றை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

இதற்கு முக்கிய காரணம், தமிழ்ப்பிரதேசங்களில் தமிழர் பிரபு வர்க்கம் என ஒன்று இருந்தது கிடையாது. தமிழர் பிரபு வர்க்கம் என்ற ஒன்று இருந்தது கொழும்பில் மாத்திரமே ஆகும். கொழும்பிலும்கூ , அவர்களில் மிக அநேகர் உயர் தொழில்களிலும், அதனைவிடக் குறைந்த அளவில், வர்த்தகத் துறையிலும்பார்க்க வங்கித் துறையிலும் பெருந்தோட்டத் துறையிலும் காணப்பட்டனர்.

தமிழர் பிரபுவர்க்கம் யாழ்ப்பாணத்தில் இருந்த பொழுதுங்கூட, நாட்டுப்புறத்தவர் மட்டத்தில் முதலாளித்துவத்துக்கு முன் நிலவிய உறவுகளைச் சீர்குலைக்க அவர்கள் விரும்பவில்லை

தன்மொழி ஊடகக் கருத்தேற்பு முதன்முதலாக நடைமுறைக்கு 'வந்த பின்னரே நடுத்தர வர்க்க அபிவிருத்தி உக்கிரம் அடைந்தது. நடுத்தர வர்க்கத்தினுட் தாமும் புகுதல் வேண்டும் என நாட்டுப்புறத்தவர் வைத்திருந்த நம்பிக்கையை அரசாங்கம் வீணாக்கிவிட்டது தொழில் வாய்ப்புகளுக்கு மாவட்ட ('டிஸ்றிக்ற் குவோட்டர்') விகிதாசார மட்டுப்படுத்தல் முறையையும், பல்கலைக்கழகப் பிரவேசத்திற்கு தரப்படுத்தலையும கையாண்டு அவர்களது இவ்வேணவா, வீண் அவா ஆகிப் போய்விடச் செய்தது அரசாங்கம்.

பிராந்திய நிர்ப்பந்திப்புகளினல் தமிழர் தேசியம் பாதிப்பு உற்றது. சிங்களவரின் சுலபப் போர்நாட்டம் இப்பிராந்திய நிர்ப்பந்திப்புகளை வெற்றிகொள்ள தமிழ்த் தேசியத்திற்கு வழிசமைத்துக் கொடுத்தது. யாழ்ப்பாணம் - மட்டக்களப்பு மாவட்டப் போட்டா போட்டி, வன்னி-யாழ்ப்பாண மாவட்ட போட்டா போட்டி ஆகியன வெற்றிகொள்ளப்பட்ட விதத்தில் சிங்கள மார்தட்டல் எவ்வாறு உதவிற்று எனக் கண்டுகொள்ளலாம். தமிழர்களின் மனித இனம் காரணமாக அவர்கள் அனைவர் மீதும் விதிக்கப்பட்ட பாரபட்சமே அப்படி உதவியது

ஆயிரத்துத்தொள்ளாயிரத்து எழுபதுகளின் முற்பகுதி தொட்டு நடைபெற்ற கமத்தொழில் அபிவிருத்தியானது சந்தைப்படுத்தலை நோக்காகக் கொண்ட பயிர்ச்செய்கை வளர்ச்சியுறவும் மேம்படவும் வழி கோலியது அவ்விளை பொருட்களின் விற்பனைக்கு இத்தீவின் சந்தைகளையே அது நம்பியிருந்தது ஆனல்,1977ஐ அடுத்து ஏற்பட்ட விவசாய மாற்றங்கள் அவற்றுக்குப் பாதகமாக அமையலாயின.

பயிர்ச் செய்கையாளர்களுக்குச் சாதகமான விலைகளை உறுதி செய்யும் விற்பனைவிலை ஆதாரங்கள் போதியன இருக்கவில்லை. கமத் தொழில் உற்பத்திக்குத் தேவையான உள்ளீடுகளின் விலைகள் திடீரென அதிகரித்தன. இச் சூழ்நிலைகளில், கடந்த காலங்களில் மிக விரும்பப்பட்ட, பணம் ஈட்டுதற்கென்றே செய்கை பண்ணப்பட்ட முக்கிய பயிர்கள் பாதகமான இந்நிலைகளுக்கு இனிமேல் நீண்ட காலம் தாக்குப்பிடிக்க இயலாதனவாகிப் போகலாம். இந்த ஸ்திரமின்மை கமத் தொழிற் சமுதாயத்தினர் மத்தியில் அதிருப்தி விளைத்தற்குக் காரணம் ஆயிற்று. யாழ்ப்பாணக் குடாநாட்டில் அரசாங்கத்திற்கு எதிரான உணர்வு இவ்வளவு தூரம் இன்று மேலோங்கி நிற்பதற்கு நிச்சயம் இந்த அதிருப்தி பங்கு நல்கியிருந்தது.'

1983 தமிழர்க்கு எதிரான பெரு வேள்வி'யில் அழித்து, நாசமாக்கப்பட்டவற்றுள் தமிழர் பிரபு வர்க்கத்தினரின் உயர் தொழில் வாழ்வு அல்லது அவர்களது மூலதனமும் அடங்கிற்று. இவ்வழிவுகளோடு இவ்வர்க்கத்திற்குச் தேசிய ஐக்கியம் வேண்டியிருக்கவில்லை. நிலைகுலைந்த சூழ்நிலைகள் முதலீட்டுக்கு உகந்தன வல்ல. ஆகவே, தமிழர் பிரதேசங்கள் அவர்களுக்கு அறவே தோதானவையல்ல என்பது தெளிவு. ஆக, அவர்கள் வெளிநாடுகளில் வதிவோராகி விட்டனர். புதிய ஓர் அரசியல் ஆட்சி, நிலைமை நிர்ணயமானதும், அவர்கள் இத்தீவுக்கு மீள்வர் எனலாம்.

தமிழரது இப் போராட்டம் தமிழரின் தேசியப் பண்பார்ந்தது என்பதைச் சுருக்கமாக நாம் கண்டுகொண்டோம். எமக்கு எஞ்சியுள்ள பணி, இப்போராட்டத்தின் தன்மை எப்படி நிர்ணயிக்கப் பெற்றது எனக் காண்பதாகும். இரு கோணங்களிலிருந்து எமது பார்வையைச் செலுத்திப் பார்ப்பது பயனுடையது: முதலாவதாக, இப்போராட்டத்தை மேற்கொள்ள வேண்டி இருந்தோர் யாவர்? இரண்டாவதாக,இப்போராட்டம் எப்படி நடாத்தப்பட்டது?

திரும்பத் திரும்ப எடுத்துரைப்பதாயினும்,சிலயதார்த்த நிலைகளை வலியுறுத்தியே ஆக வேண்டும். தமிழர் தேசியத்திற்கான போராட்டம் எதுவும், பாராளுமன்ற முறைமை ''முறிவுற்ற'' மெய்மைக்கு மாத்திரமன்றி, அதனைவிட முக்கியத்துவம் வாய்ந்தவாருக அரசின் பந்தோபஸ்துப் படைகளின் ஓங்கிய ராணுவமயம் ஆதற்குங்கூட, முகம் கொடுத்தேயாக வேண்டியிருந்தது

இராணுவமானது இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக, அதாவது 1958 ஆம் ஆண்டு முதற் கொண்டே, வட மாகாணத்தில் பயன்படுத்தப்பட்டு வருகிறது, ஆயுதப் படைகளைப் பிரயோகித்தே 1961 ஆம் ஆண்டு சத்தியாக்கிரஹம் நிறுத்தப்பட்டது. ஆயிரத்துத்தொளாயிரத்து அறுபதுகள் தொடங்கி, பொலிஸ் அட்டூழியங்களும் அதிகரித்து வருகின்றன.

இம் முறைமைக்கு அறைகூவல்விடுப்பவர்எவராகஇருந்தாலும், அவர் இம்மெய்மைகளுக்கு முகம் கொடுத்தேயாக வேண்டி இருந்தது.

பிணக்குகளைத் தீர்த்துக் கொள்ளற்கான அரங்கு பாராளுமன்றம். ஆனல் இப் பிணக்குத் தீர்க்கும் அதனாற்றல் வரவர மிகுதியும் அரிக்கப்பட்டு வரலாயிற்று, அதனல் சம்பிரதாய அரசியலாளரின் பிடி தளர்ந்து செல்லத் தொடங்கியது. அரசுக்கு எதிராகக் கிழர்ந்து எழுவோர் அத்தருணம் நடைமுறையிலிருந்த முறைமையின் பலிக் கடாக்களாயினர். ஆனல் அவர்கள் அப்போதெல்லாம் முறைமையின் ஒரு பகுதியாக இன்னமும் ஆகிவிடவில்லை

இதன் அர்த்தம்? முறைமைக்கெனச் சேர்த்துக்கொள்ளப்பட்டோரிற் பெருமளவிலானோர்,உரிமை மறுக்கப்பட்ட மாணவர் சமுதாயத்தின்றும் வரவேண்டியிருந்தனர். அவர்களும் பல்கலைக்கழக முன் (க. பொ. த. [உ. த.]) மட்டத்திலிருந்து வரவேண்டியோர் ஆயினர். (நாளை முடியும்

# அமெ. ராணுவத் தாக்குதலா?

# லிபியா பதிலடிக்குத் தயார்!

.(லண்டன்)

அமெரிக்கா தன் மீது இராணுவத் தாக்குதலை நடத்துமானால் பதிலடி கொடுக்கப்படும் என்று லிபியா எச்சரிக்கை விடுத்துள்ளது. இவ்வறிவிப்பை லிபிய அதிபர் கேர்ணல் கடாபி விடுத்துள்ளார். விமானம் தாங்கிக்கப்பலோ, குண்டு வீச்சு விமானங்களோ தம்மிடம் இல்லையென்றாலும் அமெரிக்கத் தெருக்களில் லிபியா தன் தற்கொலைப் படைகளைச் செயற்படுத்தியும் வஞ்சம் தீர்க்கும் என்றும் அவர் சூளுரைத்துள்ளார்.

திரிப்பொலிக்கருகே செய்தியாளரிடம் இவ்வாறு தம் மனத்திண்மையை வெளிப்படுத்தினார் அவர்.

மத்தியதரைக் கடலில் அமெரிக்கக் கடற்படை நடமாட்டம் குறித்துப் பிரஸ்தாபித்த கேர்ணல் கடாபி,'இதனால் இரு நாடுகளும் போர் முனையில் நிற்கின்றன.' என்றார்.

இதற்கிடையில், 'லிபியா மீது இராணுவத் தாக்குதல் மேற்கொண்டால் அமெரிக்கா, இஸ்ரேல் ஆகிய இருநாடுகளுக்குமே பேரிழப்புவரும் என்று லிபிய வெளிநாட்டமைச்சர் அலி சாபன் கூறியுள்ளார்.

பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியொன்றில்; லிபியா தாக்கப்பட்டால் எல்லாவழிகளிலும் அது தன்னைக் காத்துக் கொள்ளும் என்றும் அவர் தெரிவித்தார்.

ரோம், வியன்னா விமான நிலையங்களில் நடத்தப்பட்ட கெரில்லாத் தாக்குதல் துரதிர்ஷ்டவசமானது என்று கூறிய அவர் அதில் லிபியா சம்பந்தப்பட்டிருக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

பலஸ்தீன மக்களின் சுயாட்சிக் கோரிக்கைக்குத் தமது நாடு தொடர்ந்தும் ஆதரவளிக்கும் என்றும் அவர் சொன்னார்.

## வரதட்சணை கொலை, கொடுமை:

## மாவட்டங்களில் விசேட பொலிஸ் பிரிவு அமையும்!

(சென்னை)

வரதட்சணையால் உண்டாகும் கொலை மற்றும் கொடுமைகளைத் தடுக்கும் பொருட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் விசேட பொலிஸ் பிரிவு அமைக்கப்படவுள்ளது.

வரதட்சணைக் கொடுமைகள் பாரதத்தில் பல ரூபங்களில் சமீபகாலத்தில் உக்கிரமாக நிகழ்ந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தானில் மக்கள் கட்சி பேரணி நடைபெற்றது!

(கராச்சி)

ஜெனரல் ஷியாவுல் ஹக் தலைமையிலான தற்போதைய பாகிஸ்தான் ஆட்சியினால் தூக்கிலிடப்பட்ட மாஜி ஜனாதிபதி சுல்பிகார் அலி பூட்டோவின் ஐம்பத்தெட்டாவது பிறந்த தினத்தையொட்டி பேரணி ஒன்று நடத்தப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இராணுவ ஆட்சி அகற்றப்பட்டபின் பாகிஸ்தானில் மக்கள் கட்சியால் நடாத்தப்பட்ட முதலாவது பேரணி இதுவேயாகும்.

## தொண்டா எம். ஜி. ஆருடன் ஆலோசிப்பார்

## பாரத பொறியியல் பொருள் இலங்கைக்கு ஏற்றுமதி?

(சென்னை)

இலங்கைக் கிராமியத் தொழிற்றுறை அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் பாரதத்தின் பொறியல் பொருட்களை இலங்கைக்கு ஏற்றுமதி செய்வது தொடர்பாக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

சென்னைக்கு ஐந்து நாள் விஜயம் மேற்கொண்டு வந்துள்ள திரு. தொண்டமான் இத் தகவலை வெளியிட்டார்.

## முற்றாக நீக்கிவிட முயற்சி

(புதுடில்லி)

1990-ம் வருடத்தில் எழுத்தறிவின்மையை நாட்டிலிருந்து அகற்ற மத்திய அரசு தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த வகையில் எழுத்தறிவற்று இருக்கும் பதினைந்து முதல் முப்பத்தைந்து வயதுக்குட்பட்ட பதினொரு கோடி மக்களுக்கு கல்வியளிக்கப்படவுள்ளது.

## காமன்வெல்த் தொடர்புடைய

## உயர்மட்ட மாநாடு டில்லியில் ஆரம்பம்; பலவிடயம் ஆய்வு

(புதுடில்லி)

காமன்வெல்த் சபாநாயகர்கள், அவைத் தலைவர்களின் எட்டாவது மாநாடு புதுடில்லியில் ஆரம்பமாகியுள்ளது.

காமன்வெல்த் அமைப்பில் உள்ள இருபத்தாறு நாடுகளைச் சேர்ந்த சபாநாயகர்கள், அவைத் தலைவர்கள் என்று முப்பத்தைந்து பேர் இதில் கலந்து கொள்கின்றனர்.

இம் மாநாட்டை திரு. ஆர். வெங்கட்ராமன் ஆரம்பித்து வைத்தார்.

பாராளுமன்ற அமைப்பு முறை உட்பட பத்து விடயங்கள் இதில் ஆராயப்படும் என்று பாரத சபாநாயகர் திரு. பல்ராம்ஜாக்கர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

## ஈரானிய ஜனாதிபதி 13-ல் பாகிஸ்தானுக்கு விஜயம்!

(தெஹ்ரான்)

ஈரானிய ஜனாதிபதி திரு. கொமெய்னி எதிர்வரும் பதின் மூன்றாம் திகதி பாகிஸ்தானுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றினை மேற்கொள்ளவுள்ளார்.

மூன்று நாட்கள் அவர் பாகிஸ்தானில் தங்கியிருப்பார் என்று தெஹ்ரான் வட்டாரங்கள் தெரிவித்தன.

## பங்களாதேஷ் வேலை நிறுத்தம் அரசின் சாதகமான பதிலையடுத்து சுமுகத் தீர்வு

(டாக்கா)

பங்களாதேஷில் வேலை நிறுத்தம் செய்துவந்த டாக்டர்களும், பொறியியலாளர்களும், வேளாண்மை நிபுணர்களும் தம் வேலை நிறுத்தத்தைக் கைவிட முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தமக்கு ஊதிய உயர்வு, அந்தஸ்து உயர்வு ஆகிய கோரிக்கைகளை வற்புறுத்தி அவர்கள் கடந்த மாதம் முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வந்தனர்.

ஞாயிற்றுக்கிழமை அரசாங்கத்துடன் நடத்தப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகளின்போது கோரிக்கைகள் சாதகமான விதத்தில் பரிசீலிக்கப்படும் என ஜனாதிபதி லெப்டினன்ட் ஜெனரல் எர்ஷாத் உறுதியளித்ததையடுத்தே வேலை நிறுத்தத்தைக் கைவிட அவர்கள் இணங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இது இவ்வாறு இருக்க, டாக்காவில் இரண்டு முக்கிய எதிர்க் கட்சிகள் ஆறு மணி நேரப் பொது வேலை நிறுத்தம் செய்ததாகவும், இதனால் மாமூல் வாழ்க்கை பாதிக்கப்பட்டதாகவும் நேற்று அறிவிக்கப்பட்டது.

குறிப்பிட்டவர்களது வேலை நிறுத்தத்தை ஆதரித்தும், இராணுவ ஆட்சியை நீக்கி, நடுநிலை அரசு ஒன்றை நிறுவித் தேர்தலை நடத்த வேண்டும் என்றும் இக் கட்சிகள் வற்புறுத்தி இவ் வேலை நிறுத்தத்தை நடத்தியதாக டாக்கா அறிக்கைகள் தகவல் தந்தன.

# 1985 திரும்பிப் பார்க்கிறோம்

(நேற்றைய தொடர்ச்சி)

19 யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு பூஸா முகாம் விஜயம், மட்டுநகரில் தீவிரவாதிகள் நால்வர் சுடப்பட்டு மரணம், மக்கள் வங்கி அடகு நகைகள் 28ஆம் திகதி வழங்கப்படும் என அரசு அறிவிப்பு, லண்டனில் அமிர். 20. மன்னார் சிலாவத்துறையில் கண்ணி வெடி 5 ராணுவம் காயம், யாழ். மட்டு நகர் பஸ்சேவை ஆரம்பம், பிரதமர் ராஜீவ் - ஜே. ஆர். பஹாமாஸில் 70 நிமிடம் சந்திப்பு 21. மூதூரில் மூன்று முஸ்லிம்கள் கொலைக்கு ராணுவமே காரணம் என மூதூரில் சுவரொட்டிகள். சிலர் மீது சீருடையினர் தாக்குதல், புதுடில்லியில் இலங்கை தூதரகம் முன்பு ஆர்ப்பாட்டம். 22. இந்திய தொலைக்காட்சியில் பிரபாகரன் பேட்டி ஒளிபரப்பு இலங்கை அரசு ஆட்சேபம். ஐ. நா. சபையின் 40வது ஆண்டுக் கூட்டம் 23. அரிசி - பாண், மா விலைகள் அதிகரிப்பு, வடபகுதி தனியார் மருத்துவ கல்லூரி திறப்பு விழா, வவுனியா, திருமலை அகதிகள் யாழ் நகரில் ஊர்வலம் அரச அதிபரிடம் மகஜர், முல்லைத்தீவில் ராணுவ முகாமில் ராணுவக் கண்ணி வெடிக்கு ஒரு வீரர் பலி. 24. செட்டிகுளத்தில் கண்ணி வெடிமூன்று ராணுவம் பலி நால்வர் காயம், ஊர்காவற்றுறை நீதிமன்ற கட்டடம், சுங்க கட்டடம் தகர்ப்பு, இரவு யாழ். நகரில் குண்டு வெடிச்சத்தம், கோட்டைக்கு அருகில் உள்ள கட்டடம் சேதம், கடலில் இருந்து வந்த குண்டுக்கு ஏழு மாத குழந்தை பலி, கலவான எம். பி. சரத் பாராளுமன்றத்தில் இருந்து வெளியேற்றம். 25. வடபகுதி புகையிரத சேவை நிறுத்தம், கிளிநொச்சியில் மூன்று புகையிரத ஊழியர் கடத்தல். வவுனியாவில் இளைஞர் கைது. காத்தான்குடி சுற்றி வளைப்பு. மூவர் கைது. யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, அரச அதிபர்கள் கண்காணிப்பு குழு சந்திப்பு. 26. கண்காணிப்புக் குழு திருமலை விஜயம் அருகில் குண்டுவெடிப்பு சத்தம், வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையம் அருகில் வெடிச்சத்தம்- பதற்றம் பிரதமர் ராஜீவ் காந்தி கொர்பசேவ் மாஸ்கோவில் பேச்சு. 27, வவுனியா மூனமடுவில் ஆறு இளைஞர் சடலம் மீட்பு. கண்காணிப்புகுழு முன் திருமலை பிரஜைகள் குழு முறையீடு 28. இரவு சந்திரகிரணம். வவுனியா - நெடுங்கேணியில் ஹர்த்தால். கிரானில் கண்ணி வெடி. 29. வெல்லாவெளியில் கண்ணிவெடி பொலிஸ் இன்ஸ்பெக்டரும் ஐந்து பொலிசாரும் பலி, கடத்தப்பட்ட புகையிரதப்பகுதி ஊழியர் கிளிநொச்சியில் விடுதலை. நெடுமாறன் இலங்கை விஜயம் பற்றி பத்திரிகைகளுக்கு அறிக்கை. கோட்டை ராணுவம் யாழ். நீதிமன்றம் வரை வந்தது. மூதூரில் முஸ்லிம்-தமிழ் கலவரம்- இஸ்ரேல் பிரதமர் சிமோன் பெரஸ்- ஜே. ஆர். சந்திப்பு. தொண்டமானு சூட்டு சம்பவம் இருவர் பலி ஆறுபேர் காயம். 30. வவுனியா - கச்சேரியில் துப்பாக்கிகள் கொள்ளை. இரவு யாழ்- பஸ் நிலையத்தில் சீருடையினர் வருகை. சிலர் கைது. குண்டுவெடிப்பு. மட்டு நகரில் கல்லடியில், பொலிஸ் தீவிரவாதிகள் மோதல். 31. இந்திரா காந்தி நினைவுதினம்.

## நவம்பர்

1 நிறுத்தப்பட்ட வடபகுதி புகையிரத சேவை மீண்டும் ஆரம்பம், திருகோணமலை, திருகோணமடுவ ஆகிய இடங்களில் இடம்பெற்ற கண்ணி வெடிச்சம்பவங்களில் மொத்தம் ஒன்பது படையினர் பலி, முளங்காவிலில் இடம்பெற்ற முற்றுகையில் பத்துப்பேர் சுட்டுக்கொலை, 2. பூஸா முகாமிலுள்ள பெண்களை உடன் விடுவிக்குமாறு கண்காணிப்புக் குழு ஜனாதிபதிக்கு சிபார்சு, யுத்தநிறுத்தப் பெயரில் இலங்கை ராணுவம் பலமடைகின்றது என நெடுமாறன் சென்னையில் அறிவிப்பு, மட்டு நகர்- கல்லடியில் முகாம் சுற்றிவளைக்கப்பட்டு 17 பேர் கைது. 3. யாழ். நகரில் மீண்டும் ராணுவரோந்து, நகரில் பதற்றம், குச்சவெளி உதவி அரசாங்க அதிபர் இப்ராஹீம் கடத்தல், 4. கண்காணிப்புக் குழு யாழ். நகரில் விசாரணை ஆரம்பம், மட்டுநகர் வந்தாறுமூலை பல்கலைக்கழக மாணவர் 30 பேர் விடுதிக்குள் வைத்து கைது,மாணவர் பகிஸ்கரிப்பு 6. டில்லி பேச்சுவார்த்தையில் பங்குபற்ற கூட்டணி சென்னையிலிருந்து பயணம். திருமலை, மட்டக்களப்பு கண்ணிவெடிச் சம்பவங்களில் மொத்தம் 11 படையினர் பலி. 7. நெடுமாறன் இலங்கை விஜயம்பற்றி இந்திய அரசிடம் இலங்கை கவலை தெரிவிப்பு,மொரவேவா கிராம தாக்குதலில் 12 பேர் பலி, வீடுகள் தீக்கிரை. இங்கு நடந்த மற்றொரு சம்பவத்தில் பஸ்சில் சென்ற ஏழுபேர் பலி. 8. தமிழீழ குழு பண்டாரி சந்திப்பு. வடகிழக்கு இணைவதை ஜனாதிபதி நிராகரித்துவிட்டதாக பண்டாரி அறிவிப்பு. ஆனையிறவுக்கு அருகில் படையினரைத் தாக்க முயற்சி, இருவர் சுட்டுக் கொலை. 9. இலங்கை அரசின் யோசனைக்கு மாற்றுத்திட்டம் தருமாறு குழுக்களிடம் பண்டாரி கோரிக்கை. 10. பார்த்தசாரதி, எம். ஜி. ஆரை தமிழ்க்குழு தனித்தனி சந்தித்துப் பேச்சு; மாங்குளம் முல்லைத்தீவு வீதியில் சீருடையினர் அதிகாலை மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவிர் பலி. 12. கந்தளாயிலுள்ள தோட்டமொன்றிலிருந்து ஆறு தமிழரின் சடலங்கள் மீட்பு; முல்லைத்தீவு நீதிமன்றம் தீக்கிரை, பதிவேடுகள் அழிவு. 13. திருகோணமலைக்கு வெளிநாட்டவர் செல்லத் தடை. மட்டு நகருக்கு கண்காணிப்புக்குழு விஜயம், மட்டு நகர் கண்ணி வெடித் தாக்குதலில் நான்கு பொலிசார் காயம். 14, மத்திய கொலம்பியாவில் எரிமலை வெடித்து இருபதிணாயிரம் பேர் மரணம். 15. வடபகுதி ரயில் சேவைகள் ரத்து. வடக்கு கிழக்கில் பூரண ஹர்த்தால்; ஒட்டுசுட்டான் கண்ணி வெடிச்சம்பவத்தில் நான்கு ராணுவத்தினருக்குக் காயம். 16. மட்டக்களப்பு பார் வீதியில் கண்ணிவெடியில் சிக்கி நான்கு பொலிசார் பலி, வீடுகள், கடைகள் தீக்கிரை, ஒன்பது தமிழர் சுட்டுக் கொலை. 17. வவுனியா அரசாங்க அதிபர் வீட்டில் துப்பாக்கிகள் உட்பட பல பொருட்கள் கொள்ளை வடபகுதி ரயில் சேவை மீண்டும் ரத்து. கிளிநொச்சி திருநகர் சுற்றி வளைப்பு, மூவர் பலி, நூறு பேர் கைது.

(மிகுதி நாளை வெளிவரும்)

7.1.86 செவ்வாய்க்கிழமை

ஈழமுரசு

## தருமபுரத்தில் இரவு ரோந்தில் இருபகுதியும் நேரடி மோதல்!

(பரந்தன்)

தருமபுரம் பகுதியில் இரவுவேளை ஆயுதப்படையினருக்கும் இளைஞர் கோஷ்டிக்கும் இடையில் நடைபெற்ற நேரடிமோதலில் இருபகுதியினருக்கும் காயம் ஏற்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. காலையில் வீதியில் இரத்தக்கறைகள் படிந்து காணப்பட்டன. இரவு பத்துமணியளவில் லொறி ஒன்றில் சுமார் பதினைந்து ஆயுதப்படையினர் தருமபுரம் பகுதிக்கு வந்துகொண்டிருந்தபோது இளைஞர் கோஷ்டியின் வாகனம் ஒன்று எதிர்ப்பட்டதாம். உடன் இருபகுதியினருக்கும் சுமார் பதினைந்து நிமிடம் வரை நேரடித்துப்பாக்கிப்பிரயோகம் நடைபெற்றதாம். இதனால் இப்பகுதி மக்கள் வெளியேறி காடுகளில் தஞ்சம் புகுந்தனர்.

மனித உரிமைகள் வெகுஜன இயக்க அறிக்கை:

# கண்காணிப்புக்குழு முன்னிலையிலேயே இருநாள் தாக்குதல் நடந்துள்ளது!

"கடந்த நான்காம், ஐந்தாம் திகதிகளில் யாழ்ப்பாண நகரத்தில் இடம்பெற்ற ஆயுதப் படையினரின் துப்பாக்கி, பீரங்கி ஹெலிகப்டர் தாக்குதல்களினால் மொத்தம் பன்னிரண்டு பேர் கொல்லப்பட்டும், ஏழுபத்தைந்து பேர் வரையில் காயமடைந்தும் உள்ளனர். இத்தாக்குதல் சம்பவம் மிகவும் கண்மூடித்தனமான கொடூரச் செயலாகும். இச்சம்பவத்தை மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றது"

இவ்வாறு மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கத்தின் பொதுச் செயலாளர் திரு. சோ. தேவராஜா பத்திரிகைகளுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளார்.

மேலும் அவ்வறிக்கையில் யுத்த நிறுத்த அத்துமீறல்களைப் பற்றி விசாரணை செய்ய யாழ்ப்பாணம் வந்துள்ள கண்காணிப்புக் குழுவினரின் முன்னிலையிலேயே இவ்விரு நாள் தாக்குதல் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. தமது அன்றாட அலுவல்களைக் கவனிப்பதற்கு யாழ். நகரத்திற்கு வந்த அப்பாவிப் பொதுமக்களே அநியாயமாகக் கொல்லப்பட்டும், படுகாயங்களுக்குள்ளாகியுமுள்ளனர்.

கோட்டைக்குள்ளிருந்து ஏவப்பட்ட பீரங்கிக் குண்டுகளும், ஹெலிகப்டர் துப்பாக்கி வேட்டுக்களும் நகரின் சனநடமாட்டமுள்ள பகுதிகளில் வீழ்ந்துள்ளன. இது மிகவும் கண்மூடித்தனமானதும், மனிதனையும், மனித உயிரையும் அர்ப்பத்தனமாக மதித்து நடக்கும் மிலேச்சத்தனம் என்பதை கூறவேண்டும். தமிழ் மக்கள் அச்சமின்றித் தமது அன்றாட அலுவல்களைச் செய்யவும், அவர்களது நடமாடும் சுதந்திரத்தை உறுதி செய்யவும் இதுபோன்ற அத்துமீறல் தாக்குதல் சம்பவங்கள் உடன் நிறுத்தப்படல் வேண்டும் என மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம் வற்புறுத்துகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அடகுநகை சங்கத்தை கலைக்க ஆலோசனை; வங்கி அதிகாரிகள் ஒத்துழைப்பில்லையாம்!

மக்கள் வங்கி அடகு வைத்தோர் சங்கத்தை கலைத்துவிடுவது பற்றி தற்போது ஆலோசிக்கப்பட்டுவருகின்றது. இச்சங்கம் இதுவரை பல போராட்டங்களை நடாத்திய போதிலும் சில அதிகாரிகளின் ஒத்துழைப்பின்மையால் அடகு நகைகளை மீள்வது சம்பந்தமாக சாதகமான முடிவு எதனையும் பெற முடியாமலிருப்பதே இதற்குக் காரணமென தெரிவிக்கப்படுகின்றது:

இது சம்பந்தமாக மேற்படி சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

வடபகுதி மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் கடந்த 26-ம் திகதி எங்களுக்கு அனுப்பிய கடிதத்தையடுத்து நாம் எமது மறியல் போராட்டத்தை ஒத்திவைத்தோம். ஆனால் அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தவாறு எமக்கு சாதகமான நடவடிக்கை எதனையும் இதுவரை மேற்கொள்ளவில்லை.

இது தவிர பலாலி இராணுவ முகாமருகில் வைத்து நாளாந்தம் நூறு நகைகள் வீதம் விநியோகிப்பது என்ற திட்டமும் சில அதிகாரிகளின் ஒத்துழைப்பின்மையால் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இவ் நகைகளை மீட்பது சம்பந்தமாக நாம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு மக்கள் வங்கி வட பிராந்திய அதிகாரிகளின் பூரண ஒத்துழைப்பும் கிடைக்கவில்லை.

இந்நிலையில் எமது சங்கம் தொடர்ந்து இயங்குவதால் என்ன பயன் என எமது அங்கத்தவர்கள் வினா எழுப்பியுள்ளனர். இதனால் எமது சங்கத்தைக் கலைத்து விடுவது பற்றி நாம் தீவிரமாக ஆலோசித்துக் கொண்டிருக்கின்றோம் என இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

### இனப்பிரச்சினைக்கு....

சந்தித்து இலங்கை இனப்பிரச்சினை பற்றி விவாதிக்க திட்டமிட்டுள்ளார்.

திருமதி பண்டாரநாயக்கா குறிப்பிட்டது போல ஏப்ரலில் தேர்தல் நடைபெறுமா என்பது பற்றி கேட்டதற்கு இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்றும், ஆனால் ஜனாதிபதி விரும்பினால் உடனடியாக தேர்தல் நடாத்தலாம் எனவும் அவர் சொன்னார்.

### கணேஷ்....

யில் அனுமதிக்கப்பட்ட சுங்க உதவி கலக்டர் திரு. கே. கணேஷ், நேற்றுவிமான மூலம் கொழும்பு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டார். பிரதம சுங்க கலக்டர் திரு. எச். பி. திஸநாயக்கா எடுத்த நடவடிக்கையின் பயனாக இவர் கொண்டு செல்லப்பட்டதாக யாழ். சுங்கப்பகுதி அதிகாரிகள் தெரிவித்தனர்.

### கூட்டணியோ...

இந்தக் கருத்தை அங்கீகரிக்கவில்லை என்றார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் என்பது வெளிநாட்டவர் ஆட்சியின்போது ஏற்படுத்தப்பட்டது. இவை ஒரு காலத்திலும் தமிழர்களின் பாரம்பரிய பகுதியாக ஏற்படுத்தப்படவில்லை என்றார்.

தீவிரவாதிகளில் சிலர் மார்க்ஸிசம் பேசுகிறார்கள்; வேறு சிலர் இன அடிப்படையில் தமது போராட்டங்களை நடாத்துகின்றனர். இன அடிப்படையில் இயங்கும் குழுவினருக்கு வெளிநாட்டிலுள்ள அத்தபோன்ற இயக்கங்களுடன் தொடர்புண்டு. ஆனால் இந்த தீவிரவாதிகளுடன் தொடர்புடைய எந்த நாடுகளின் பெயரையும் அவர் குறிப்பிடவில்லை.

தீவிரவாதிகளுக்கு சில நாடுகளில் இருந்து ஆயுதங்கள் அன்பளிப்பாகவும், விற்பனையாகவும் கிடைக்கிறது. சில நாடுகளில் புகலிடமும் கொடுக்கப்படுகிறது என்றும், சில நாடுகளில் தீவிரவாதிகளை தேசிய வீரர்கள் எனவும் கூறுகின்றனர் என்றார்.

### நேரடிச் ....

டையினருடன் இளைஞர்கள் நேரடியாக மோதியதாகவும், சிறுடையினர் தமது ஆயுதங்களையும் எடுக்க முடியாது, காடுகளுக்குள்ளால் தப்பியோடியதாகவும் பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

## யாழ். தபால் நிலையத்தை இடம் மாற்ற ஆலோசனை

கோட்டைக்குள் இருந்து அடிக்கடி மேற்கொள்ளப்படும் தாக்குதலால் பிரதம தபால் நிலைய ஊழியர்கள் அச்சம் காரணமாக நேற்று முதல் வேலைக்கு வர முடியாதெனக் கூறி விட்டதாகத் தெரியவருகிறது.

இதனால் தபால் நிலையம் நேற்று முழு நாளும் மூடப்பட்டேயிருந்தது.

இந்த வேளையில் வேறோர் இடத்தில் தபால் நிலையத்தை தற்காலிகமா நடத்துவது பற்றி ஆலோசிக்கப்படுவதாகவும் தெரியவருகிறது.

### பொதுத்....

டுமெனவும், பொதுத் தேர்தலை வலியுறுத்தி நாடு முழுவதும் பிரச்சாரம் செய்வதெனவும் இங்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### கண்காணிப்புக் குழு....

குழுவினர் ஹெலிகப்டர் மூலம் கோட்டையிலிருந்து பலாலிக்கு புறப்பட்டபோது அதனை நோக்கி பீரங்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன. இவ்வாறு அரசாங்க தரப்பில தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் ஏழு பேர் பலியானதாகவும், அறுபது பேர் காயமடைந்ததாகவும் கண்காணிப்புக் குழுவுக்கு தெரியவந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

நேற்றுக் காலை கொழும்பு திரும்பிய கண்காணிப்புக் குழு யாழ்ப்பாண விஜயம் பற்றி அறிக்கையையும்சமர்ப்பிக்கும்.

### அப்பாவித் தமிழர்....

செயற்குழு கூட்டத்தின் முடிவில் இலங்கை இனப்பிரச்சினை பற்றி அறிக்கை வெளியிடப்பட்டது.

இந்தத்தீர்மானம் பற்றி பத்திரிகைகளுக்கு விடுத்த இக்கட்சியின் தலைவர் திரு. வாஜபேய் தமது கட்சி தமிழ் ஈழக்கோரிக்கையை எதிர்ப்பதாக குறிப்பிட்டார்.

இலங்கை அரசும், தமிழ்க் குழுவினரும் இனப்பிரச்சினைக்கு கூட்டமைப்பு அடிப்படையில் சுமுகமான தீர்வுகாண முயற்சிக்கவேண்டும் எனவும் இததீர்மானம் தெரிவிக்கிறது.

இலங்கை அரசை இந்தவகையில சர்வதேசரீதியில நிர்ப்பந்திக்க இந்தியா முயற்சிக்க வேண்டும எனவும் இத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### ஆறு பேரின்....

(39) ஆகிய நால்வரினதும் மரணவிசாரணைகளை யாழ். திடீர் மரணவிசாரணை அதிகாரி க. கேசவன் நடாத்தினார். இவர்களின் பிரேதபரிசோதனைகளை டாக்டர் பரிமேலழகன் நடாத்தினார்.

இறந்தவர்களுடன் காரில் கூடப் பயணம செய்த மற்றுமிரு சுங்க அதிகாரிகளினதும், காயமடைந்து சிகிச்சை பெற்றுவரும் சுங்க உதவி கலெக்டர் கணேசினதும் சாட்சியங்களைப் பதிவு செய்யும்பொருட்டுமேல் விசாரணை வெள்ளிக்கிழமை வரை ஒத்திவைக்கபபட்டது. மற்றுமிருவரான புங்குடுதீவு அன்னலிங்கம், மண்டைதீவு கேதீஸ்வர சர்மா (18) ஆகியோரின் மரண விசாரணைகளும் நடைபெற்றன.

மாதகலைச் சேர்ந்த செல்வி சாந்தி(17)யின்சடலம் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்படாமலே உறவினர்களால் எடுத்துச் செல்லப்பட்டது.

### ஞாயிறு....

பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த மேலும் ஒருவர் நேற்றுக்காலை மரணமானார்.

சுங்கத் திணைக்களத்தில் சிற்றூழியராகப் பணிபுரிபவரும், அரியாலையைச் சேர்ந்தவருமாகிய க. சந்திரதாசன் (34) என்பவரே நேற்று மரணமானவராவர்.

### முல்லைதீவில்....

தீவு வைத்தியசாலைக்கு மருந்து எடுப்பதற்காக சென்றுகொண்டிருந்தனராம். அவ்வேளையில் படையினர் அவ்வீதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையிலேயே சுடப்பட்டதாகத் தெரிவித்தனர்.

### 30 பேர் ...

கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் இன்னும் 30 பேர் மாத்திரமே யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மிகுதிப் பேர் தமது வீடுகளுக்கு அண்மையிலுள்ள வைத்தியசாலைகளுக்குச் சென்றுள்ளனர்.

## மரண அறிவித்தல்

### தர்மலிங்கம் திலகேந்திரன்

(சுங்கப் பகுதி உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்)

தர்மலிங்கம் திலகேந்திரன் அகால மரணமாகிவிட்டார். இவர் அரியாலை பிரபல கட்டிட ஒப்பந்தகாரர் காலம் சென்ற வே. தர்மலிங்கம், கனகாம்பிகை ஆகியோரின் சிரேஷ்ட புதல்வரும், கமலராணியின் அன்புக்கணவரும்சுஜேநதர், துஷந்தர், ஆகியோரின் அருமைத் தந்தையும், தர்மேந்திரன் (பாபு) விஜயேந்திரன் (பிரான்ஸ்) யுவனேந்திரன் (பிரான்ஸ்) இலகேந்திரன் மற்றும் ஸ்ரீ ஜமுனா வசந்தி (லண்டன்) ரேணுகா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 07-01-86 செவ்வாய்க்கிழமை பிற்பகல் இரண்டு மணியளவில் இல, 40, சாஸ்திரியார் ஒழுங்கையில் இருக்கும் அன்னாரது இல்லத்திலிருந்து அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

R / 15284

## மரண அறிவித்தல்

### கந்தையா சந்திரதாசன்

புங்கங்குளம் ஸ்ரேஷன் முன்பாக உள்ள இல்லத்தைச் சேர்ந்த யாழ். சுங்க இலாகாவில் கடமையாற்றிய கந்தையா சந்திரதாசன் 6-01-86 திங்கள் மரணமடைந்து விட்டார். இவர் காலஞ் சென்ற கந்தையா பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும், சந்திர மலரின் அன்புக் கணவரும், தினேஸ்குமாரின் அருமைத் தந்தையும், சந்திரசேகரன், சந்திராதேவி, நிர்மலா தேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற செல்வத்துரை, வீரலட்சுமி ஆகியோரின் மருமகனும், இராஜரூபன், இதயரூபன், சத்தியரூபன் ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் புங்கங்குளம் ஸ்ரேஷன் வியூவில் உள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து தகனக கிரியைகளுக்காக இன்று காலை 10 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

R / 15283

தகவல்: மனைவி,

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 07-01-86 செவ்வாய்க்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336